# வீரச்சிறுவன்

# ஜம்பு



யோ. சுந்தரலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரச்சிறுவன் ஜம்பு

யோ. சுந்தரலட்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரச்சிறுவன் ஜம்பு
குழந்தை இலக்கியம்
யோ. சுந்தரலட்சுமி
முதற்பதிப்பு - 2002
கணினி வடிவமைப்பு,
அச்சுப்பதிப்பு : Quick Tec Academy
385 - 2/9, Galle Road,
Colombo - 06.
T.P : 504311
உரிமைபதிவு : யோ. சுந்தரலட்சுமி
வெளியீடு : அட்மிரல் பப்ளிஷர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
403 - 1/1, காலி வீதி,
கொழும்பு - 06.
T.P : 362766
விலை : ரூபா 50 /=

VEERACH - CIRUVAN JAMBU
CHILDRENS LITERATURE
Y. SUNDARALUXMI
FIRST EDITION - 2002
TYPE SETTING &
PRINTING : Quick Tec Academy
385 - 2/9, Galle Road,
Colombo - 06.
T.P : 504311
COPYRIGHT RESERVED : Y. SUNDARALUXMY
PUBLISHED BY : Admiral Publishers (Pvt) Ltd.
403 - 1/1, Galle Road,
Colombo - 06.
T.P : 362766

PRICE : Rs. 50 /=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரச்சிறுவன் ஜம்பு


முல்லைக் காட்டிலே ஜம்பு என்ற பெயருடைய குட்டி யானை ஒருவன் வாழ்ந்து வந்தான். குட்டி யானை ஜம்பு அழகானவன். சாம்பல் நிறமான உடலையும் சுளகுகள் போல இரண்டு செவிகளையும் கொண்டவன்.

குட்டிச்சிறுவன் ஜம்புவின் மேல் அளவில்லாத அன்புகொண்டவர் அம்மா யானையார். பள்ளிக்கூடத்திலும் கெட்டிக்காரச் சிறுவன் என்று நல்ல பெயரை வாங்கியவன் ஜம்பு.

ஒருநாள் பின்னேரம் காட்டிலிருந்த விளையாட்டு மைதானத்துக்கு ஜம்பு விளையாடச் சென்றான். செல்லும் வழியிலே நெட்டைக்கழுத்துடைய ஒட்டகச்சிவிங்கியார் ஒருவரைக்கண்டான். நெட்டைக் கழுத்து ஒட்டகச்சிவிங்கியார் உயரமானதொரு நாவல் மரத்தின் கீழே நின்றிருந்தார். நாவல் மரத்தின் கிளைகளிலே பழுத்துத்தொங்கிய நாவற்பழங்களை கஷ்டமில்லாது பறித்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியநிறமுள்ள நன்கு பழுத்த நாவற்பழங்களைப் பார்த்த ஜம்பு அவற்றை சுவைத்துச் சாப்பிட ஆசைப்பட்டான். ஒட்டகச்சிவிங்கியாரின் அருகே சென்று தனக்கும் சில நாவற்பழங்களைப் பறித்துத்தந்திடுமாறு பணிவுடன் கேட்டான்.

ஜம்புவைப்பார்த்து அன்போடு சிரித்தார் ஒட்டகச்சிவிங்கியார். ஒரே எட்டாக எட்டி உயரமான கிளையொன்றில் தொங்கிய நாவற் பழக்குலையொன்றைப் பறித்து ஜம்புவிடம் கொடுத்தார்.

ஒட்டகச்சிவிங்கியாருக்கு நன்றி சொல்லிய ஜம்பு நாவற்பழங்களை சுவைத்துச்சாப்பிட்டான். சாப்பிடும் நேரத்திலே ஜம்புவுக்கு ஒரு யோசனை தோன்றியது. ஒட்டகச்சிவிங்கியாரைப் போலவே நீண்டதொரு கழுத்து எனக்கிருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்?. அம்மாவைப்போல நீளமான ஒரு தும்பிக்கை இருந்தாலாவது பரவாயில்லை அதுவும் எனக்கில்லையே.

சுவைநிறைந்த நாவற்பழங்களை விரும்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் பறித்துச்சாப்பிடவும் என்னால் முடியாதே. ஜம்புவுக்கு அழுகை அழுகையாய் வந்தது. ஒட்டகச்சிவிங்கியாரைப்போலவே தனக்கும் ஒரு கழுத்து உடனடியாகக் கிடைத்திட வேண்டுமென மிகவும் ஆசைப்பட்டான். தனது ஆசையை அம்மாவிடம் சொல்லுவதற்காக வீட்டுக்கு விரைந்தோடினான்.

விளையாடச்சென்ற ஜம்பு அழுதுகொண்டு வீடு திரும்பிவருவதைக் கண்ட அம்மா யானையார் மிகவும் கவலையடைந்தார். ஜம்புவின் முதுகிலே ஆதரவாகத்தடவி நடந்தது என்னவோ என்று அன்போடு கேட்டார். நடந்ததை எல்லாம் அம்மாவிடம் சொல்லிய ஜம்பு, ‘‘அம்மா அம்மா ஒட்டகச்சிவிங்கியாரைப் போலவே எனக்கும் ஒரு கழுத்து வேணும்'' என்று தனது ஆசையையும் சொன்னான்.

ஜம்புவின் ஆசையைக்கேட்ட அம்மா விழுந்து விழுந்து சிரித்தார். சிரித்துமுடித்தபின் ஜம்புவைப் பார்த்து ‘‘ஜம்பு ஒட்டகச்சிவிங்கியாரைப்போலவே ஒரு கழுத்து இன்னும் மூன்று நாட்களில் உனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாய்க் கிடைத்திடும்", என்று சொன்னார்.

அம்மா சொன்னதைக்கேட்ட ஜம்பு அழுகையை நிறுத்தி அமைதியானான். அன்புமிக்க அன்னைக்கு நன்றி சொல்லி, விளையாடுவதற்காக மீண்டும் வெளியே ஓடிச்சென்றான்.

விளையாடச் செல்லும் வழியிலே ஜம்பு இப்போது ஒரு குட்டிக்குரங்காரைக் கண்டான். சுட்டித்தனம் நிறைந்த அந்தக் குட்டிக்குரங்கார் கையிலே ஒரு வாழைப்பழத்தை வைத்திருந்தார்.

நீளமான தனது வாலை மரக்கிளையொன்றிலே சுற்றிக்கொண்டு தொங்கி ஊஞ்சலாடிக் கொண்டிருந்தார். குட்டிக்குரங்கார் கையிலே வைத்திருந்த வாழைப்பழத்தை பார்த்த ஜம்பு அதைச் சாப்பிட ஆசைப்பட்டான்.

குரங்காரின் அருகே சென்று தனக்கும் ஒரு வாழைப்பழத்தைப் பிடுங்கித் தந்திடுமாறு பணிவுடன் கேட்டான். ஜம்புவின் ஆசையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்ட குட்டிக்குரங்கார் மரக்கிளைகளில் தாவி ஓடி மறைந்தார். பதிலேதும் சொல்லிடாது குட்டிக்குரங்கார் சென்றதைக்கண்ட ஜம்பு கவலைமிகக்கொண்டான்.

அந்த இடத்திலிருந்து நகர்ந்து மெல்ல நடந்தான். அதே நேரத்தில் குட்டியானையாரே இங்கே வாரும் என்றதொரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்த ஜம்பு கையிலே ஒரு வாழைப்பழத்துடன் நின்றிருந்த குட்டிக்குரங்காரைக் கண்டான். வாழைப்பழத்தை ஜம்புவிடம் கொடுத்துவிட்டு ஒரேஓட்டமாய் அங்கிருந்து ஓடிமறைந்தார் குட்டிக்குரங்கார்.

''குட்டிக்குரங்காரே உமக்கு மிகவும் நன்றி'' என்று ஜம்பு சொன்னது கூட அவர் காதுகளில் விழுந்ததோ என்னவோ தெரியவில்லை.

வாழைப்பழத்தைச் சாப்பிட்ட ஜம்புவின் மனதில் இப்போது புதிதாய் ஒரு ஆசை பிறந்தது. ஓட்டகச்சிவிங்கியாராக மாறுவதைவிட குட்டிக்குரங்காராக மாறிவிடுவதே மிகவும் நல்லது. நாவற்பழங்களைவிட குட்டிக்குரங்கார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது கொடுத்த வாழைப்பழம் அல்லவா இனிப்பாய் இருக்கிறது. அதைவிட குட்டிக்குரங்காராக மாறினால் மரக்கிளைகளில் எல்லாம் தாவியோடித் திரியலாமே. குட்டி யானையாராகவோ ஒட்டகச்சிவிங்கியாராகவோ இருந்தால் மரக்கிளைகளில் தாவித்திரிந்து மகிழ முடியுமா என்ன?

வீட்டுக்குத் திரும்பிச்சென்று அம்மாவிடம் தனது விருப்பத்தைச்சொல்லிவிட ஜம்பு ஆசைப்பட்டான். வீட்டை நோக்கி விரைந்து ஓடினான்.

விளையாடச்செல்லாது பாதியிலே திரும்பி வந்த ஜம்புவைப்பார்த்து நடந்தது என்னவோ என்று அன்போடு விசாரித்தார் அம்மா யானையார். ஒட்டகச்சிவிங்கியாரைப்போல ஒரு கழுத்து எனக்கு வேண்டாம். குட்டிக்குரங்காராக நான் மாறவேண்டும் என்று தனது புதிய ஆசையை அம்மாவிடம் சொன்னான். ஜம்புவின் புதிய விருப்பத்தைக்கேட்ட அம்மா ஆதரவாக அவனது தலையில் தடவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஜம்பு இன்னும் மூன்று நாட்களில் நிச்சயமாய் நீ ஒரு குட்டிக்குரங்காராக மாறிவிடுவாய்” என்று சொன்னார்.


அம்மா சொன்னதைக்கேட்ட ஜம்பு மிகவும் மகிழ்ச்சியடைந்தான். குட்டிக்குரங்காராக மாறியபின் செய்யப்போகும் குறும்பு வேலைகளைப் பற்றி யோசித்துக்கொண்டே நித்திரையில் ஆழ்ந்தான்.

மறுநாள் பள்ளி சென்று வந்த ஜம்பு வழக்கம் போலவே விளையாடுவதற்காக காட்டுமைதானத்துக்கு ஓடிச்சென்றான். செல்லும் வழியிலே கேட்டதொரு இனிமையான குரல் அவனது ஓட்டத்தை நிறுத்தியது. பாதையோரமாய் நின்றிருந்தமரமொன்றின் கிளையிலே அமர்ந்திருந்த பஞ்சவர்ணக்கிளியார் ஒருவரே அந்தக்குரலின் சொந்தக்காரர் என்பதை தெரிந்து கொண்டான்.

இனிமையான குரலை மட்டுமல்லாது கண்ணைப்பறித்திடும் நிறங்கள் சேர்ந்த அழகான உடலையும் கொண்டவர் பஞ்சவர்ணக்கிளியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியபூவைப் போலிருந்த கிளியாரைப் பார்த்து சிலைபோல நின்றான் ஐம்பு.

குட்டிக்குரங்காராக அல்லாது பஞ்சவர்ணக்கிளியார் போல மாறிட மிகவும் ஆசைப்பட்டான் ஐம்பு. இப்போதுகூடத் தாமதமாகிவிடவில்லை. நாளைக்குத்தானே நான் குட்டிக்குரங்காராக மாறுவேன்? அதற்குள் அம்மாவிடம் சென்று என்னை ஒரு பஞ்சவர்ணக்கிளியாராக மாற்றும்படி கேட்டால் என்ன. இவ்வாறு நினைத்த ஐம்பு வீட்டுக்கு ஓடிச்சென்றான். அம்மாவிடம் தனது முடிவையும் சொன்னான்.

ஐம்பு சொல்லியதைக்கேட்ட அம்மா சிரித்துக்கொண்டே ‘‘சரி ஐம்பு உனது விருப்பப்படியே நாளைக்கு ஒரு பஞ்சவர்ணக்கிளியாக நீ மாறலாம். ஆனால் இந்த முடிவை உன்னால் இனிமேல் மாற்றிக்கொள்ள முடியாது”.

அம்மா சொல்லியதெற்கெல்லாம் சரியென்று தலையாட்டிய ஐம்பு ஓடிச்சென்று அவரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப்பிடித்து முத்தமிட்டான்.

அடுத்தநாள் விடுமுறை. வெளியிலே எங்கேயும் செல்லாது வீட்டிலே தங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான் ஜம்பு. அன்றைக்குத்தான் அழகான்தொரு பஞ்சவர்ணக்கிளியாராக அவன் மாறப்போகிறானே.

அம்மா கடைக்குப் போய்விட்டார். ஜம்பு மட்டுமே வீட்டிலிருந்தான். பஞ்சவர்ணக்கிளியாராக மாறிய பின்பு என்னவெல்லாம் செய்திடலாம் என்பதைப்பற்றிக் கடுமையாக யோசித்துக் கொண்டிருந்தான்.

".ஜம்பு ஜம்பு எங்களுக்கு உதவி செய்திட ஓடி வருவாயா" என்றதொரு குரல் விட்டின் வெளியே கேட்டது. ஓடிச்சென்று வெளியே எட்டிப்பார்த்தான் ஜம்பு. வீட்டு வாசலிலே நெட்டைக்கழுத்து ஒட்டகச்சிவிங்கியாரும் கூடவே குட்டிக்குரங்காரும் பஞ்சவர்ணக்கிளியாரும் சேர்ந்து வந்து நின்றிருந்தார்கள்.

வெளியேவந்த ஜம்பு நடந்ததுஎன்னவோ என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறையுடன் விசாரித்தான். ஒட்டகச்சிவிங்கியாரும் குட்டிக்குரங்காரும் ஒருமித்த குரலில் நேற்றுவீசிய புயல் காற்றிலே முறிந்துபோன மரக்கிளையின் கீழ் சிக்கித்தவிக்கும் அப்பாவிச் சிங்கக்குட்டியாரின் கதையை விளக்கமாக ஜம்புவிடம் சொன்னார்கள்.

அதுமட்டுமல்லாது சிங்கக்குட்டியாரைக் காப்பாற்றிட காட்டு ராஜா சிங்கத்தாராலேயே முடியவில்லை என்பதையும் கவலையுடன் சொன்னார்கள். ஒட்டகச்சிவிங்கியாரையும் குட்டிக்குரங்காரையும் தொடர்ந்து இப்போது பஞ்சவர்ணக்கிளியார் பேசினார். ‘‘ஜம்பு ஜம்பு சிங்கக்குட்டியாரின் உயிரைக் காப்பாற்றிட உன்னைத்தவிர வேறு யாராலும் முடியாது. ஓடிவந்து உதவி செய்திடுவாயா?”.

கஷ்டமென்று உதவி கேட்கும் போது முடியாது என்றா ஜம்புசொல்லுவான்? நல்ல குணமுடைய அருமையான சிறுவனல்லவா அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சவர்ணக்கிளியார் முன்னால் பறந்து சென்று வழிகாட்ட சிங்கக்குட்டியார் சிக்கியிருந்த மரத்தடிக்கு ஜம்பு விரைந்து ஓடினான். அவனைத்தொடர்ந்து ஒட்டகச்சிவிங்கியாரும் குட்டிக்குரங்காரும் பாய்ந்தோடினார்கள்.

சிங்கக்குட்டியாரின் மேல் விழுந்திருந்த மரக்கிளையை ஒரே தூக்காக தூக்கி தூர வீசி எறிந்தான் ஜம்பு. மரக்கிளையின் அடியிலிருந்து விடுபட்ட சிங்கக்குட்டியார் ஜம்புவைக்கட்டிப்பிடித்து அவனுக்கு நன்றிகள் சொன்னார்.

நெட்டைக்கழுத்து ஒட்டகச்சிவிங்கியாரும் குட்டிக்குரங்காரும் ஜம்புவை வீரச்சிறுவன் என்று சொல்லிப் பாராட்டினார்கள். சிங்கராஜா ஜம்புவின் கைகளைப்பற்றிக் கொண்டு அவனுக்கு நன்றிசொன்னார். தனது அன்பு மகனின் உயிரைக் காப்பாற்றிய ஜம்புவை இனிமேல் ‘‘வீரச்சிறுவன் ஜம்பு’’ என்றே எல்லோரும் அழைத்திடவேண்டும் எனவும் கட்டளையிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து பறந்து சென்ற பஞ்சவர்ணக் கிளியார் சிவந்ததொரு மாம்பழத்தை எடுத்துவந்து ஜம்புவிடம் கொடுத்தார்.

ஜம்புவின் மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. ஓடிச்சென்று நடந்ததை எல்லாம் அம்மாவிடம் சொல்ல துடியாய்த்துடித்தான்.

வீட்டிலே ஜம்புவைக்காணாது அம்மா யானையார் கவலைமிகக்கொண்டார். அதற்குள் பஞ்சவர்ணக்கிளியாக மாறி என்னை விட்டுப்பறந்து போய்விட்டானோ எனது ஜம்பு என்று கூட சந்தேகப்பட்டார். மகனைத்தேடி வெளியே ஓடினார்.

வீட்டைநோக்கி ஓடிச்சென்ற ஜம்பு பாதி வழியிலே அம்மாவைச்சந்தித்தான். நடந்ததையெல்லாம் ஒன்றுவிடாமல் அம்மாவிடம் சொன்னான்.

ஜம்பு சொன்னதைக் கேட்ட அம்மா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. நல்ல சிறுவனப்பா நீ என்று சொல்லி அவனைப் பாராட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜம்பவைப் பார்த்த அம்மா ''ஜம்பு இன்றைக்கு நீ அழகானதொரு பஞ்சவர்ணக்கிளியாக அல்லவா மாறிவிடப்போகிறாய்'' என்று சொன்னார். ''இல்லை இல்லை அம்மா நான் என்றைக்குமே ஜம்புவாகத்தான் இருப்பேன்'', என்று உறுதியாகச் சொன்னான் ஜம்பு.


ஜம்பு சொன்னதைக் கேட்ட அம்மா யானையார் அளவில்லாத மகிழ்ச்சியடைந்தார். ''ஜம்பு நீ வீரச்சிறுவன் மட்டுமல்ல கெட்டிக்காரனும்கூட'' என்று சொல்லி அவனைப்பாராட்டினார்.

நீண்டகழுத்துடைய ஒட்டகச்சிவிங்கியாராகவோ குட்டிக்குரங்காராகவோ அல்லது அழகான பஞ்சவர்ணக்கிளியாராகவோ மாறியிருந்தால் சிங்கக்குட்டியாரின் உயிரைக் காப்பாற்றி வீரச்சிறுவன் என்று பெயரை வாங்கியிருக்க ஜம்புவால் முடிந்திருக்குமா என்ன?.

பிள்ளைகளே! கருணை நிறைந்த கடவுள் எங்களை மனிதர்களாகப் படைத்தது மட்டுமல்லாமல் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமைகளைத் தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதலால் நம்மைவிட மற்றவர்கள் உயர்ந்தவர்கள் என்று எண்ணி ஒரு காலமும் கவலைப்படக்கூடாது. அவர்கள் நம்மைப் பார்த்துப் பாராட்டும்படியாக நடந்துகாட்டுவதே மேன்மையானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org